Nallur Branch Library

# கோணேசர் ஆலயத்தில் ஒரு பெண், 5 வயோதிபர் பொம்பர் தாக்கி மரணம்; ராணுவத்திலும் 4 பேர்!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 14-8-86 வியாழன் (ஆடி 29 துல்ஹஜ 7) முழக்கம் 191

(திருமலை)

திருமலை கோணேசர் ஆலயத்தின் மீது நேற்று முன்தினம் பொம்பர் விமானங்களும், ஹெலிகப்டரும் சரமாரியாக நடத்திய தாக்குதலினால் ஒரு பெண்மணி உட்பட ஆறு வயோதிபர்கள் அந்த இடத்திலேயே மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அறுவரும் கோவிலில் தங்கியிருக்கும் அ யார்களாவர். மரணமான பெண்மணி திருமதி கோணமலை என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். மரணமான மற்றைய ஐவரும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதனைத் தவிர மேலும் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் ராணுவ தரப்பில் நான்கு பேர் மரணமாகியுள்ளனர். இவர்களில் ஒருவரின் சடலம் மட்டும் மீட்கப்பட்டு நேற்று ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்குக் கொண்டுவரப்பட்டது. மற்றைய மூன்று சடலங்களும் நேற்றுவரை மீட்கப்படவில்லையென்றும், சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்திருக்கலாமெனவும் கூறப்படுகிறது. இத் தாக்குதலினால் கோணேசர் மலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

## கடலில் மீட்கப்பட்ட 152 இலங்கைத் தமிழரும் கனடாவில் ஒரு வருடம் தங்கியிருப்பதற்கு அனுமதி

(ஒட்டாவா)

கனடா கடலிலிருந்து மீட்கப்பட்ட 152 இலங்கைத் தமிழர்களும் கனடாவில் வசிக்க விரும்பினால் அவர்களுக்கு ஒரு வருட விஸா வழங்குவதென்று கனடா அரசு தீர்மானித்துள்ளது. குறிப்பிட்ட 152 பேரும் ஜூலை மாதம் 7ம் திகதி இந்தியாவிலிருந்து சீனக்கப்பலொன்றின் மூலம் கனடாவுக்கு தமது பயணத்தை ஆரம்பித்ததாகவும், இதற்காக தலா முப்பதாயிரம் ரூபா இந்தியப் பணம் கொடுத்ததாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது

வட அத்திலாண்டிக் கடலில் அனாதரவான நிலையில் கைவிடப்பட்ட குறிப்பிட்ட சரக்குக் கப்பலைக் கனடிய விமானம் தொடர்ந்தும் தேடி வருவதாக அறிவிக்கப்படுகிறது. ஆழ்கடலில் இவர்கள் தத்தளித்த நிலையில் காணப்பட்டபோது இவர்களிடம் சிறிதளவு குடிநீர் மட்டுமே இருந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இக்கப்பல் கிழைத்தேயத்தவரினது எனவும் சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட தமிழரில் ஒருவரான 40 வயதுடைய —6ம் பக்கம் பார்க்க

★ கல்முனையில் மீண்டும் கலவரம்; தொடர்ந்து ஊரடங்கு

# தமிழரின் 3 சடலங்கள் கரையில் ஒதுங்கின; 6 கடைகள் தீக்கிரை

## கல்முனை எம். பீ. மன்சூரின் சகோதரரின் பெற்றோல் 'ஷெட்'டும் தீவைப்பு

(மட்டுநகர்)

நேற்று முன்தினம் கட்டுப்பாடடுக்குள்ளிருந்த கல்முனையில் நேற்றுப் பகல் மீண்டும் கலவரம் மூண்டதால் ஆஸ்பத்திரிக்கு முன்னால் ஆறு கடைகள் அடித்து நொருக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இதில் ஒன்று தமிழருக்குச் சொந்தமான சரஸ்வதி ஸ்டோர்ஸ் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை எம்.பியும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் மன்சூரின் சகோதரருக்குச் சொந்தமான பெற்றோல் 'ஷெட்'டும் கண்ணாடிகள் நொருக்கப்பட்ட பின்னர் எரிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்றிரவும் இரவு நேர பொலிஸ் ஊரடங்கு இங்கு பிறப்பிக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் முதல் நாளன்று கொல்லப்பட்ட ஜோதி ஸ்டோர்ஸ் உரிமையாளர் சின்னத்தம்பியின் சடலம் ஒந்தாச்சி மடத்தடியில் மீட்கப்பட்டுள்ளதாக முன்னாள் மாவட்ட சபைப் பிரமுகர் திரு. வேல்முருகு நேற்றிரவு தெரி —6ம் பக்கம் பார்க்க

## கூட்டணிக் குழு இன்று வரும்

கூட்டணியின் ஏழு பேர் கொண்ட அரசியல் பீடக்குழு —6ம் பக்கம் பார்க்க

## எயர்லங்கா விமானக் குண்டு விசாரணையின் 3 ஏ. எஸ். பிக்களும் வேலை இடைநிறுத்தம்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் எயர்லங்கா விமானத்தில் குண்டு வைத்து தகர்த்தியது சம்பந்தமான விசாரணைகளை நடத்திவந்த இரகஸிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று உதவி பொலிஸ் சுப்பிரின்டன்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் போது சில முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கிடைத்த புகார்களே இதற்குக் காரணம் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மூவரின் தற்காலிக வேலை நீக்கத்தையடுத்து இரகஸிய —6ம் பக்கம் பார்க்க

## இன்று உண்ணாவிரதம்!

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் தொடர்ச்சியான போராட்டங்களை தாம் நடத்தப்போவதாகவும், இதன் முதற் கட்டமாக இன்று அடையாள உண்ணாவிரதம் நடத்தப்படுமெனவும் மாணவர் அமைப்புக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைப்புக் குழுவின் இம் முடிவு தெரிவிக்கப்பட்டது.

இன்று நடைபெறும் உண்ணாவிரதத்தின்போதும் பேச்சுவார்த்தைகளின் போதும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் —6ம் பக்கம் பார்க்க

## டில்லி செல்வர்

(சென்னை)

சென்னையிலுள்ள விடுதலைப் போராளிகளின் குழுவின் —6ம் பக்கம் பார்க்க

3 சடலங்கள் சவச்சாலையில்!

## பிரேத சோதனைக்கு சட்ட வைத்திய அதிகாரி இல்லை

(வண்ணார்பண்ணை)

யாழ். பெரியாஸ்பத்திரியில் சட்ட வைத்திய அதிகாரி இல்லாமையால் பிரேத பரிசோதனை செய்ய முடியாத நிலையில் மூவரின் சடலங்கள் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் உறவினர்கள் சடலத்தை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

—6ம் பக்கம் பார்க்க

## அக்கரைப்பற்றில் புலிகள் கமாண்டோ மீது தாக்குதல்!

அக்கரைப்பற்று பொலிஸ் ராணுவ கூட்டு முகாமில் இருந்து புறப்பட்ட கமாண்டோக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்திய சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இவர்கள் முகாமுக்கு அண்மையில் நடைபவனியாக வந்து கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் கிறனேட்டுகளை —6ம் பக்கம் பார்க்க

பதில் துணைவேந்தர் வேண்டுகோள்

## நிர்வாகம் வழமை போல இயங்குவதற்கு உதவுங்கள்

பல்கலைக்கழக நிர்வாகம் வழமையாக இயங்குவதைத் தடை செய்யாமல் ஒத்துழைப்புவழங்குமாறு யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் குழு —6ம் பக்கம் பார்க்க

வீதியில் சென்றவர் காயமுற்றார்

## நாவற்குழி முகாமிலிருந்து அதிகாலையில் ஷெல் அடி

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்றுக் காலைவரை நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து பல தடவைகள் பல பகுதிகளையும் நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஷெல்களில் சில கோப்பாய்-கைதடி பாதையிலும் வீழ்ந்து வெடித்தன.

—6ம் பக்கம் பார்க்க

ஈழமுரசு


## The DATACENTER

முதல் முறையாக யாழ்நகரில்
அறிமுகப்படுத்தும் புதிய பயிற்சி நெறி

# WORD PROCESSING

ஆரம்பம்: 17-08-86 (ஞாயிறு)

விபரங்கட்கு:

**The DATACENTER**

77, Main Street, Jaffna. (R/24676)



# Computer Programming

*Weekend Classes*

G. C. E. A/L பரீட்சைக்கு
இம்முறை தோன்றிய
மாணவர்களின் வசதிக்காக விசேஷ
வகுப்புகள் ஆரம்பம்

16-8-86 சனிக்கிழமை 8 மணிக்கு

'We never forget you have a choice'

**CANTABIA INSTITUTE**

21, Main Street, Jaffna
Phone: 24201

B/1457



## பிரயாண ஒழுங்குகள்

○ கனடா
○ சவூதி அரேபியா
○ ஈராக்

1. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.
2. சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
3. ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிகவிரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

**N. BALA**

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

R/24664



## பிரயாண ஒழுங்குகள்

○ கனடா ○ ஈராக்
○ சவூதி அரேபியா

(1) கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labous) மேசன், தச்சுத் தொழிலாளர், எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19-ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

இ. தேவராசா
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி அருகாமை)

R/24677



**வரி விளம்பரம்**

### காணி விற்பனைக்கு

ஆவரங்கால் சந்தைக்கு அருகாமையில் 25 பரப்பு தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மல்லிகா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால், புத்தூர். R/24681


# தமிழீழ மழலைகளுக்காக புலிமாமாவின் அறிக்கை

''எம் உயிரினும் இனிய தமிழீழ மழலைகளுக்காக'' என்ற தலைப்பில் ''புலிமாமா''வினால் பல அறிவுரைகளைக் கொண்ட பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்றைய போராட்ட சூழலில், எதிரியின் அடங்காத்தனத்திலேயே எம் மக்களின் வாழ்வு தொடர்கிறது. இப்போராட்ட சூழ்நிலையில் எம் செல்வச்சிறுர்கள் எதுவித உயிரோட்டமுமின்றி பயப்பிராந்தியுடனும் பீதியுடனுமே தம வாழ்நாளைக் கடத்துகின்றனர்.

உலகளாவிய ரீதியில் எதிர்காலத்தை நன்கு திட்டமிட்ட நாடுகள் குழந்தை பராமரிப்பில் மிகுந்த கவனமெடுக்கின்றன. உதாரணமாக சோவியத் ரஷ்யாவில் மிக அதிகமாக நிதி ஒதுக்கப்படும் ஓர் துறை ''சிறுவர் பராமரிப்பு'' ஆகும்.

இதே சூழ்நிலையில் ஒவ்வோர் நாட்டு போராட்ட காலகட்டத்திலும் உளவியல் ரீதியாக சிறுவர் மன நிலை மிகக் கடுமையாக பாதிப்படைகிறது. ஒரு நாட்டின் வருங்கால வாரிசுகளுக்கேற்படும் பாதிப்பு அந்நாட்டின் எதிர்காலத்தையே இருளடையச் செய்கிறது.

எதையும் தெளிவாக புரிந்து கொள்ளமுடியாத வயதிலுள்ள கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளங்களில் தினசரியான துப்பாக்கி வேட்டுக்களும் குண்டுச் சத்தங்களும் இம்மண்ணின் இரத்தங்களும் துன்ப துயரங்களும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்நிலையில் இவற்றை ஜீரணிக்க முடியாமல் சின்னஞ் சிறுசுகளின் மனநிலை பெரிதும் பாதிப்படைகிறது. சிறுவயதில் மனநிலையில் ஏற்படும் கடுமையான பாதிப்பு மனதில் ஏற்படும் விகாரம் மனித நாகரிகமற்ற சந்ததியின் உருவாக்கத்திற்கு வழி வகுக்கும்.

எனவே இன்றைய சூழ்நிலையில் நாம் குழந்தைகளின் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளோம். எம் நாட்டின் வருங்கால வாரிசுகளின் ஒழுங்கமைவான வளர்ச்சியிலேயே எம் எதிர்காலம் தங்கியுள்ளது.

இந்த வகையில் இப்போரின் கடுமையான தாக்கங்களில் இருந்து எம் மழலைகளின் மனநிலை பாதிப்படையாமல் பேணுவதன், ஓர் அங்கமாக கந்தர்மடத்தில் அமைந்துள்ள சரணாலயம், செயற்படுகிறது.

இதேபோன்று அனைத்து பொது ஸ்தாபனங்களும் ''சிறுவர் பராமரிப்பில்'' முழுமூச்சாக ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் அனைத்து தமிழ் பேசும் மக்களும் நம் நாட்டின் எதிர்கால சொத்துக்களாகிய மழலைச்செல்வங்களில் அதிக அக்கறையுடன் அவர்களின் ஒழுங்கான வளர்ச்சிக்கும் அவர்களின் எதிர்கால சுபீட்சமான – சுதந்திரமான வாழ்வுக்குமாக அயராது உழைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.


உதயம் தயாரிப்புகள்

தமிழ் மக்களின் சுகாதாரத்திற்கு

உத்தரவாதம் வழங்குகின்றன.

# ரங்கா சீயக்காய் பவுடர்

இரசாயன சேர்க்கைகள் எதுவுமின்றி, இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சீயக்காய், வெந்தயம், சர்வதேச மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படுவது ரங்கா சீயக்காய் பவுடர்.

இயற்கை வளத்துக்கும், கேச வளர்ச்சிக்கும், தலை, கண் உறுப்புக்களுக்கு ஆரோக்கியமும் வழங்குகிறது ரங்கா சீயக்காய் பவுடர்.

ஆயுர்வேத டாக்டர்களால் உத்தரவாதம் வழங்குவது ரங்கா சீயக்காய் பவுடர். தமிழ் மண் எங்கும் விற்பனையாகிறது.

இது ஓர் சுதேச உற்பத்தி

R/24683



# City & Guilds of London Institute

## Examination May/June 1987

✳ **Electrical Engineering Technicians**

(1) Engineering Science & Circuit (2) Power
(3) Electronics

O/L சித்தியடைந்தவர்கள் அனுமதிக்கப்படுவர்

Lecturer: **Mr. Chandirabose**
[T. Eng Lon, Asso fellow C S.E.R.T (Lon), Assoc Mem. I. E. E T. E. (Lon)]

U. K. இல் S. E. R. T., I. E. E. T. E. யில் பதிவு செய்வதற்கேற்ற ஒழுங்குகள் எமது இன்ஸ்ரிரியூட்டில் செய்து கொடுக்கப்படும்.

✳ **வீடியோ டெக் றிப்பியறிங்**

றேடியோ ரெலிவிஷன் படித்தவர் மட்டும் அனுமதிக்கப்படுவர். எமது நிறுவனத்தில் படித்தவர்களும் சேரலாம். அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

✳ **எயர் கொண்டிஷனிங்**

சகல குளிர் சாதனங்களின் தொழிற்பாடு, பழுது பார்த்தல் என்பன கூடிய நேர செய்முறை பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம் 20-08-86 9.30 a.m.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

5?1, ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவையருகாமை)
யாழ்ப்பாணம்.

R/24679


## பிறந்தநாள் வாழ்த்து

✱ சங்கானை கிழக்கு, இராமேஸ்வரன் சிவனேஸ்வரி தம்பதியின் மகன் சாரங்கன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ கொக்குவில் மேற்கு சண்முகலிங்கம் தம்பதியின் மகன் மயூரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ யாழ். பாங்ஷால் வீதி, ஆரோக்கியநாதர் கமலராணி தம்பதியின் மகன் எறிக்பிரதீபன் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ அரியாலை, நித்தியானந்தன் சந்திராதேவி தம்பதியின் மகன் நிஸாந்தன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# பாடசாலையின் வளர்ச்சிக்கு அரசை நம்பியிருக்கக்கூடாது

"பச்சிலைப்பள்ளி பகுதியில் இப்பாடசாலை இவ்வாறு முன்னேறியிருக்க அதன் பழைய மாணவரும், பெற்ரேரும் அளித்து வந்த ஆதரவே காரணம். எனவே அரசின் உதவிகளை நம்பியிராது பெற்ரேர் பழைய மாணவர் தொடர்ந்தும் தமது உதவிகளையும் ஆதரவையும் அளிக்க வேண்டும். பின்தங்கிய பகுதியில் இப்பாடசாலை வளர்ச்சி மற்றைய பாடசாலைகளுக்கு ஒரு முன்மாதிரியே." இவ்வாறு உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் திரு. ரீ இராஜலிங்கம் தாளையடி ரோ. க. வித்தியாசாலை பெற்ரேர் தின, பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

பாடசாலை அதிபர் சங். சகோதரி லொறிங்டா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. இராஜலிங்கம் தொடர்ந்து பேசுகையில் "நான் கல்வி பயின்றது ஒரு கிறிஸ்தவ பாடசாலை. அன்றைய தினம் அதில் இருந்த ஒழுக்கம், கல்வி முறைகளை இங்கே காணுகிறேன். கிறிஸ்தவ பாடசாலைகள் இன்றும் சகல துறைகளிலும் முன்மாதிரியாக இருப்பது பாராட்டப்பட வேண்டியது" என்ருர்.

பங்குத் தந்தை வண. பிதா மைக்கல் சௌந்தரநாயகம் அடிகள்பேசும்போது 'அரசாங்கம் நமது பாடசாலைகளை சுவீகரித்தாலும் எமது உதவிகளும் ஆதரவுகளும் எப்பொழுதும் கிடைக்கும். நாம் அரசின் பாடசாலை என்று எண்ணுது நமது பாடசாலை என்ற நோக்கில் மேலும் இது வளர உதவ வேண்டும்" என்ருர்.

சலமோன் அரசன் நாடகமும் இடம்பெற்றது. இதில் நடித்த செல்வி கு. பிரேமலதா விழாவில் பாராட்டப்பட்டார்.

# தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் நாதஸ்வர- தவில் பயிற்சிகள் விஜயதசமியில் ஆரம்பமாகும்

## யாழ்.மாவட்ட கலாசார பேரவை ஒழுங்கு

### 10 - 20 வயதுக்குட்பட்டோர் பயிற்சி பெறலாம்

யாழ். மாவட்டக் கலாசார பேரவையின் ஆதரவில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் நாதஸ்வர- தவில் பயிற்சிக் கல்லூரியொன்று அமைக்கப்படவுள்ளது. கடந்தவாரம் தேவஸ்தான மண்டபத்தில் யாழ். அரசாங்க அதிபரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள்பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டது.

பத்து வயதுக்கும் இருபது வயதுக்குமிடைப்பட்ட, இத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஆரம்பத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பயிற்சி வகுப்பு நடாத்தப்படும். ஈழத்தின் மூத்த நாதஸ்வர, தவில் கலைஞர்களும் புகழ் பெற்ற கலைஞர்களும் ஆரம்பத்தில் பயிற்சி வகுப்புகளை நடத்துவார்.

கலாசாரப் பேரவை இவ் வருடத்துக்கென ஆறு தவில்களையும், ஆறு நாதஸ்வரங்களையும் இப்பயிற்சிக்கென வழங்கும்.

தேவஸ்தானத்தில் நடைபெற்ற இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கலைஞர்களான சின்னராசா, பஞ்சாபிகேசன், குமரகுரு, சுந்தரமூர்த்தி, பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, சிதம்பரநாதன், பஞ்சமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி வரவேற்புரை நிகழ்த்துகையில் பழநி, திருப்பதி தேவஸ்தானங்களில் இருப்பது போன்று இப்பயிற்சிக் கல்லூரியை துர்க்கை தேவஸ்தானத்தில் நடத்தவிருப்பது தமக்குமகிழ்ச்சியை அளிப்பதாகக் கூறினர்.

யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் செல்வி எம். சோமசுந்தரம், ஈழமுரசு ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், துர்க்கை அம்மன் தேவஸ்தான செயலாளர், பொருளாளர் உட்பட மற்றும் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் தெரிவித்தனர்.

நாதஸ்வர, தவில் பயிற்சிகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது பெயர், விலாசம் ஆகியவைகளுடன் விண்ணப்பங்களை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பெயருக்கு துர்க்கை அம்மன் தேவஸ்தானத்துக்கு அனுப்ப வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

கலைஞர்கள் சார்பில் தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா நன்றி தெரிவித்துப் பேசினர்.

அக்டோபர் மாதத்தில் விஜயதசமி தினத்தன்று இப் பயிற்சி வகுப்பை ஆரம்பிப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# தகவத்தின் 1986 முதற் காலாண்டு பரிசை ஈழமுரசின் 3 கதைகளுமே பெறுகின்றன

தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்), 1986 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இலங்கையிலே தமிழில் வெளியான சிறுகதைகளை மதிப்பீடு செய்து, அவற்றில் இரண்டு சிறுகதைகளை பரிசுக்கு உரியனவாகவும், ஒன்றைப் பாராட்டுக்கு உரியதாகவும் தெரிவு செய்துள்ளது. இந்த மூன்று கதைகளும் ஈழமுரசு பத்திரிகையில் வெளிவந்தவையாகும்.

இந்த மதிப்பீட்டில் முதல் இடம்பெற்றிருப்பது, திரு.நா. யோகேந்திரநாதன் புனைந்த 'அவள் அக்காவாகிவிட்டாள்' என்னும் சிறுகதை இது ஈழமுரசு மார்ச் 9ஆந் திகதிய இதழில் பிரசுரமானதாகும். திரு. யோகேந்திரநாதன் தகவம் வழங்கும் ரூபா 150/- பரிசும் பாராட்டும் பெறுகிருர்.

திரு யோ. பெனடிக்றபாலன் ஈழமுரசு இரண்டாவது ஆண்டு மலரில் எழுதிய 'உம்முடைய இராச்சியம் வருக' என்னும் சிறுகதை தகவம் மதிப்பீட்டில் இரண்டாவது இடம்பெற்றுள்ளது. பெனடிக்றபாலன் அவர்கள் ரூ100/- பரிசும் சான்றிதழும் பெறுகின்ருர்.

தாமரைச் செல்வி அவர்கள் எழுதி, ஈழமுரசு மலரில் வெளிவந்த 'இங்கேயும் சில இழப்புகள்' என்னும் சிறுகதை பாராட்டுக்குரிய கதையாகத் தெரிவு பெற்றுள்ளது.

தகவம், இதுவரை தனது காலாண்டுச் சிறுகதை மதிப்பீட்டில் முதலிடம் பெறும் கதைக்கு ரூ. 100/- பரிசாக வழங்கி வந்தது. 1986 இலிருந்து இத்தொகை ரூ. 150/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டாவது இடம்பெறும் சிறுகதைக்கும் பரிசு வழங்கப்படுகிறது. இரண்டாவது பரிசு ரூ. 100/- ஆகும்.

# 'முதலுதவி பயிற்சி அவசியம்'

(சாவகச்சேரி)

"இன்றைய காலகட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையத் தொண்டர்களும் சூழல் சுகாதாரத்திலும், தாய்சேய் நலனிலும் அக்கறை காட்ட வேண்டியது அவசியம். அத்துடன் முதலுதவி பயிற்சியினைக் கூடியவரை அனைவரும் பெற்றிருக்க வேண்டும்."

இவ்வாறு கைதடிப்பகுதி சுகாதார பரிசோதகர் திரு. செல்லையா கூறினர் கைதடியில் ஆரம்பசுகாதார நிலையமீளய்வு கூட்டம், சுகாதாரபரிசோதகர் திரு. செல்லையா தலைமையில் நடைபெற்றது. அதற்குத் தலைமை தாங்கிப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதில் யாழ். சுகாதார போதனசிரியர் திரு. ப. வைத்தியேஸ்வரன், சுகாதார சம்பந்தமான கருத்துரைகளையும் நிகழ்த்தினர்.

இக் கூட்டத்தில் கைதடி தெற்கு, கைதடி வடக்கு, நாவற்குழி, மறவன்புலவுப்பகுதி ஆரம்ப சுகாதார தொண்டர்கள், குடும்ப நல சேவையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டார்கள்.

# நயினதீவு பிரசவம் பற்றி டாக்டர் தரும் விளக்கம்

நயினதீவில் பிரசவம் பார்த்த, படை அதிகாரியின் செய்தி தொடர்பாக அவனையா முன்னணி விடுத்த கண்டன அறிக்கை இம்மாதம் 7ம் திகதி 'ஈழமுரசு'வில் வெளியானது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு 'ஈழமுரசு' வுக்கு பதிவுததபால் மூலம் அனுப்பியுள்ள பதில் இங்கு தரபபடுகின்றது.

இந்நிகழ்வு 27.3.86ல் நடந்தது.

பிரசவத்தின் போது மருத்துவமாது, பிரசவததாயின் மாமியும், பெண் பரிசாரகரும், பெண் ஊழியர் ஒருவரும் நானும், வைத்திய பிரிவைச் சேர்ந்த அந்தப்படை அதிகாரியும் நின்ருேம்.

குறிக்கப்பட்ட படை அதிகாரி வைத்திய பிரிவைச் சேர்ந்தவரெனத் தன்னைத் தானே அறிமுகபபடுத்தினர். எனது முன்னிலையிலும் ஊழியர் முன்னிலையிலும் அவரின பேச்சும் விளக்கஙகளும் ஐயப்பாட்டை ஏற்படுத்தவல்லை.

அவரை எவ்வகையிலும் வெளியேற்றும் அதிகாரம் என்னிடம் இருக்கவில்லை. வைத்தியன் என்ற முறையில் அந் நடவடிக்கை தேவைப்படவும் இல்லை.

எனவே, பிரசவத்தாய்க்கும் குறிபபிட்ட அதிகாரி ஒரு வைத்தியர் என அறிமுகம் நின்ற சிப்பந்திகள் மூலம தெரிவிக்கப்பட்டது.

5 மாத இடைவெளிக்குப் பின் இவ்விபரம் இவ்வூர் ஆஸ்பத்திரியில் வேலை செய்து தற்சமயம் யாழ். மாறி இருக்கும் சிற்றூழியரின் குரோத நடவடிக்கை என்பது இவ்வூர் மக்களுக்கும், பிரபலயமான இயக்கம் ஒன்றுக்கும், சுகாதார பிராந்தியபணிப்பாளர் (யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் விளங்கும்.

எனவே, ஒரு வைத்திய அதிகாரியும், சட்டத்தரணியுமான என்னை மானபங்கப்படுத்தும் நடவடிக்கையாகவே நான் கருதுகின்றேன்.

ஏற்கனவே ஈழநாடு பத்திரிகைக்கு விளக்கம் கொடுத்துள்ளேன்.

தாங்களும் முன்பக்கச் செய்தியாக 27-3-86ல் நடந்த இந்த நிகழ்வை மேற்கூறிய விபரங்களை உள்ளடக்கிப் பிரசுரித்து ஐயப்பாட்டை நீக்குமாறு வேண்டுகின்றேன்.

டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு

# பண்டத்தரிப்பில் கசிப்பு வேட்டை

(பண்டத்தரிப்பு)

கடந்த திங்கட்கிழமை வாகனம் ஒன்றில் கசிப்பு ஏற்றிக்கொண்டு கசிப்பு விற்பனையினரும் சில கசிப்பு சுவைஞர்களும் வந்தனர்.

இரகசிய கசிப்பு கடத்தலை ஏதோ விதமாக மோப்பம் பிடித்த வாலிபர் கோஷ்டி ஒன்று பண்டத்தரிப்பு நாற்சந்தியில் வாகனத்தை மறித்து சரக்கை இறக்கியது.

வாகனத்தில் கசிப்புடன் வந்தவர்களை ஆளுக்கொருவராக பிடித்து நையப் புடைத்ததோடு, கசிப்பு அபிடேகமும் செய்யப்பட்டது.

ஐயோ, ஐயோ கண் எரிகிறது என்று அனைவரும் கால் போன போக்கில் ஓட்டம் எடுத்தனர்.

மீதமாக இருந்த கசிப்பும் சந்தியில் ஊற்றி பரலும் கெடுத்து உபயோகமற்றதாக்கப்பட்டது.

# ஷப்ரு வெற்றிக்கிண்ணத்துக்கான 10 கழகங்கள் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வெள்ளி விழாவை ஒட்டி "ஷப்ரு" வெற்றிக் கிண்ணத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிகெட் சுற்றுப்போட்டி ஒன்று யாழ். மாவட்ட கழக அணிகளுக்கு இடையில் நடத்தப்படவருக்கிறது.

ஷப்ரு யுனிக்கோ பிரைஸ்ஸ் லிமெட்டெட்டின் ஆதரவில் நடைபெறும் இந்தப் போட்டியின் ஆட்டங்கள் 'நொக்கவுட்' அடிப்படையில் நடைபெறும்.

ஆட்டங்கள் யாவும் எதிர்வரும் 17, 19, 24, 30, 31 ஆம் திகதிகளில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஆயர் தியோகுப்பிள்ளை அரங்கில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக நீல அணி, கோல்ட்ஸ் அணி, யாழ். சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக நீல அணி, பிறவுன்ஸ் அணி, காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன விளையாட்டுக் கழக அணி, மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழக அணி, யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி, யங்பட்ரிலியன்ஸ் அணி, தெல்லிப்பளை கிருஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி ஆகிய பத்து அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

முதல் சுற்று ஆட்டங்களும் கால் இறுதி, அரையிறுதி ஆட்டங்களும் 30 ஓவர்கள் அடிப்படையில் நடைபெறும் இறுதியாட்டம் 40 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டிருக்கும்.

வெற்றி பெறும் அணிகளுக்கும் திறமையாக விளையாடும் வீரர்களுக்கும் பல பெறுமதி மிக்க பரிசுகளை வழங்க ஷப்ரு நிறுவனம் முன்வந்திருக்கின்றது.

உ
முருகா
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986



இன்று ஐந்தாம் திருவிழா

காவடிச் சிந்து

நிலவும் அரவும் புனல் மதியும் சடையில் அணி
நிமலர் அருளும் கந்த வேளையே - அன்பால்
நிதமும் பணிவர் எந்த வேளையும் - வெண்
நீறு பூசுவர் ஆறுமாமுகன் நீலமாமயில் ஏறுகோலமே
நினைவர் கசந்துருகி ஆடுவார் - பாப்
புனைவர் இசை கலந்து பாடுவார்!
- சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

உதய சிந்தனை

உன் உள்ளம் உணர்ந்த உண்மையை உலகமே எதிர்த்தாலும் சொல்லத் தயங்காதே; உண்மை வெல்லும்.

—ஓர் அறிஞர்

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒலி

14-8-86 வியாழக்கிழமை (அக்ஷய) ஆடி 29

# மௌனத்தை கலைத்து பிரச்சினையை அணுகுங்கள்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதுவருட மாணவர் அனுமதியுடன் ஆரம்பமான சில சம்பவங்கள், இப்போது பூதாகரமான பிரச்சினையாக மாறி, பல்கலைக்கழக நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் நிலைக்கு வந்துள்ளது.

"ராக்கிங்' என்ற பயங்கரவாதியினால் உருவாகிய நெருக்கடி நிலையே இத்தனைக்கும் காரணமாகும்.

இப்போது உருவாகியுள்ள, முற்றிலும் எதிர்பார்த்திராத நெருக்கடிப் பிரச்சினைக்கு யார் காரணம்? சரியானவர் யார்? பிழையானவர் யார்? என்பதைக் கண்டு பிடிப்பது எமது நோக்கமல்ல.

இந்தப் பிரச்சினையை வளரவிடுவதால் ஏற்படக் கூடிய தாக்கத்தை சம்பந்தப்பட்டவர்கள் எவராகவிருந்தாலும் அவர்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இதனை நாம் எழுத வேண்டியுள்ளது

"ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பார்கள்.

"தமிழ் இளைஞர்கள் இரண்டுபட்டால் ஆட்சியாளருக்குக் கொண்டாட்டம்" என்பதை நாம் இப்போது நினைவில் கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையில் பல்கலைக்கழகங்களில் பல போராட்டங்கள், நேரடி மோதல்கள், பகிஷ்கரிப்புகள், கைகலப்புகள் இடம் பெற்றபோதுகூட, எந்தவிதமான பிரச்சினையுமின்றி இயங்கிய ஒரேயொரு பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டுமே!

இவ்வாறு புகழ்பெற்ற இவ்விடம், தமிழ் மக்களின் சகல போராட்டங்களிலும் முக்கியமான ஒரு களமாகவும், கலை, கலாசார, விடுதலைப் புரட்சிப் போராட்டங்களின் பதிய தளமாகவும் இயங்கிவந்ததையும், வருவதையும் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

இதற்கு ஒரு 'நாவூறு' ஏற்பட்டது போலவே இப்போதைய சம்பவங்கள் ஏற்பட்டதாக நாம் கருதுகின்றோம்.

ராக்கிங் எந்தவகையிலும் இடம்பெறக் கூடாது என்பதை, ஏற்கனவேயே பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமது அறிக்கையொன்றின் மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

ராக்கிங்கில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று விடுதலைப் புலிகள் இயக்கமும் முன்னெச்சரிக்கை செய்திருந்தது.

ஆனாலும் இவைகளையும் மீறி, புதிய மாணவி ஒருவர் துன்புறுத்தப்பட்டதால் மூன்று மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி நேர்ந்ததாகவும், அவர்கள் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

இதனையடுத்தே வாதப் பிரதிவாதங்கள் ஆரம்பமாயின.

மாணவர்கள் பகிஷ்கரிப்பு, மறியல், போராட்டம் ஆகியன ஆரம்பித்து நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

கோரிக்கைகள், வேண்டுதல்கள் என்பன நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

துணைவேந்தர் நாட்டில் இல்லாத சமயத்தில் ஆரம்பமாகியிருக்கும் நெருக்கடி நிலை, உளவு நிறுவனங்கள் மாணவர் மத்தியில் ஊடுருவியுள்ளன என்று பருத்தித்துறை பிரஜைகள் குழு பூரணமாக நம்புமளவுக்கு மோசமாகியுள்ளது.

கோரிக்கைகளை நிர்வாகம் நிறைவேற்றத் தவறினால் தங்களை தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு மாற்றுமாறு சில மாணவர்கள் கேட்பார்களானால், இவ்வாறான சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவிருக்கலாம்.

இறுதியாக புதிய பல்கலைக்கழக மாணவர் அமைப்பொன்று கூட இப்பிரச்சினை காரணமாக உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழினம் எதிர் நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள் மத்தியில் 'ராக்கிங்' ஒழிக்கப்படவேண்டும் என்பதில் சகலருமே ஒத்த கருத்துடையோராகவுள்ளனர்.

அதுபோலவே, தற்போதைய சூழநிலையில், பல்கலைக்கழகத்துக்குள் ஏற்படுவரும் அவசியமற்ற மோதல்கள், கருத்து முரண்பாடுகளும் ஒழிக்கப்பட்டு, ஆரோக்கியமான ஒரு சுமுகநிலை உருவாக்கப்படவேண்டும்.

பல்கலைக்கழக நிர்வாகம் தனது மௌன விரதத்தைக் கலைத்து, சகல பகுதியினருடனும் பேச்சு நடத்தி, பல்கலைக்கழகத்தை மீண்டும் இயங்கச் செய்ய தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ நேற்றைய தொடர்ச்சி

# சிங்களக் குடியானவர்கள் ஏன் கொல்லப்படுகின்றனர்?

இலங்கைத் தீவின் ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கூட்டிய பல கட்சி மாநாடு 1986, ஜூன் மாதம் இறுதி வாக்கில கூடவிருந்தது. அதன் கண் சமுகமளித்து, கலந்துரையாடல்களிற்பங்குபற்றும் வண்ணம் ஜெயவர்த்தனவின் அழைப்புபெற்ற பதினொருகட்சிகளுள், அங்ஙனம் பங்குபற்ற மறுத்த மூன்று அரசியற் கட்சிகளுள் ஒன்று, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி. இக்கூட்டணி மறுப்பு இந்திய பத்திரிகைகளில் கடும் கண்டனம் எழவைத்தது.

சென்னையில் வெளியாகும் நாளிதழ், 'த ஹிந்து', எல்லா வேளைகளிலும் இப்பத்திரிகை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியையும் தமிழர் விடுதலைப் போராளிகளையும் ஆதரித்து நிற்பது செய்தித் தாழ் கூட, 1986, ஜூன் மாதம் இருபத்து நாலாம் திகதியத் தனது ஆசிரியத் தலையங்கத்தின்கீழ் கூட்டணித் தலைமையை மென்மையாகக் கடிந்து கருத்து வெளியிட்டு இருந்தது.

சென்னை 'இந்து' வின் ஜூன் இருபத்து நாலாம் திகதிய ஆசிரியத் தலையங்கம் வெளியிட்ட அபிப்பிராயம் வருமாறு: இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கண், மாகாண மட்டத்தில் ஆட்சி அதிகாரம் தமிழர்க்கு உரித்தாக்கப்படுதல் தொடர்பில, இலங்கை அரசு அண்மையில் சில பிரேரணைகளின் தொகுப்பு ஒன்றைத தயாரித்து இருந்தது. இத்தொகுப்பினை ஏற்று கலந்துரையாடுதற்கென ஒழுங்காகியிருந்த திகதி, ஜூன் மாதம் இருபத்து நாலு ஆகும்; இடம் கொழும்பு மாநகர். இக் கூட்டத்திற் பங்குபற்றுவதில்லை எனத் தமிழர் ஐக்கியவிடுதலைக் கூட்டணி தீர்மானித்தது. கொள்கைவாரியாகவோ யுக்திவாரியாகவோ சரியானதாகத் தோன்றவில்லை.

அதனைத்தொடர்ந்து இவ்வாசிரியத் தலையங்கம், அண்மைக் காலத்தில் இது தொடர்பான நிலைமையையிட்டு ஒரு நீண்ட கண்டன பூர்வமான பகுப்பாய்வில் இறங்கியிருந்தது. இலங்கை அரசாங்கம் அண்மைக காலங்களில் இத் தமிழர் உரிமைக் கோரிக்கை விடயத்தைக் கையாண்ட விதமே இவ்வாறு சென்னையில் வெளியாகும் 'த ஹிந்து' பத்திரிகாசிரியர் தலையங்கத்தின் கண்டனத்திற்குப் பாத்திரமாகி இருந்தது. முதலில் இலங்கை அரசு ஓர் தீர்வுகாண முன்வந்தது. அப்பிரயத்தனங்கள் இதுவரை காலமும் எட்டாத ஒரு கானல் நீராகவே முடிந்துள்ளன. அதன்பிறகு தயவு தாட்சண்யமோ, ஈவு இரக்கமோ அற்ற ஒரு இராணுவத் தீர்வில் இலங்கை அரசு இறங்கியுள்ளது. அதனால், அப்பாவிகளான அநேக தமிழ்க் குடிசனங்களின் அனாவசிய அழிவை, சாவை அது விளைவித்துமுள்ளது. இவ்வாறு 'இந்து' ஆசிரியர் தலையங்கம் இலங்கை அரசைச் சாடியது.

இதுவரை, தமிழ்ப் போராளிகள் சிங்களக் கிராமத்தவர்களைச் சின்னாபின்னமாகக் கொன்றிருந்தனர். இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தமிழ்க் குடிசனங்கள் கொல்லப்பட்டமைக்குப் பதிலடியாகவே இச் சின்னாபின்ன வதைகள் அமைந்தன என இதுவரை இந்தியாவில் கருதப்பட்டுவந்தது. அல்லது சிங்களவர்களின் காணிக் குடியமர்வின் விளைவானவையாக இவ்வதைகள் இருக்கலாம் என இந்தியாவிற் கருத்து நிலவியது. இக்குடியமர்வு குறித்து ஓரிரு வார்த்தைகள்.

இலங்கையில், சில பிரதேசங்கள் உடமைப் பிணக்கிற்கு உரியனவாக இருந்து வந்தன. அங்கெல்லாம் இவை தமிழ் மக்களுக்கு உரியனவா? அல்லது, சிங்களச் சனங்களுடையவையா? என்ற சர்ச்சை நிலவி வந்தது. அவ்விடங்களில் சிங்கள மக்களைக் குழுமங்கள் குழுமங்களாகக் குடியமர்த்த அல்லது மீளக் குடியமர்த்த இலங்கை அரசு முயற்சிகள் மேற் கொண்டு வந்தது. இம் முயற்சிகளின் பின்னணியில் போதிய கற்பனாசக்தி இயங்கவில்லை. தவிரவும், அப்பிரயத்தனங்கள் யதார்த்த பூர்வமானவையுமல்ல. எனவே, இவற்றைத் தடுத்து நிறுத்தும் ஓர் எச்சரிக்கைவிடுக்கு முகமாகவே தமிழ்ப் போராளிகள் சிங்களக் கிராமத்தவர்களைச் சிதைத்துக் கொன்றனர் என இந்தியாவிற் கருதப்பட்டது.

தமிழ் மக்களுக்கும் இலங்கையின் சிங்கள அரசிற்கும் இடையே பிணக்கு எழக் காரணமாக விளங்கிய விடயம் அரசின் காணிக் குடியமர்வுக் கொள்கை ஆகும். குறித்த சில பிரதேசங்களில் அனேக நூற்றாண்டுகளாக சிங்களவர்கள், தமிழர்கள் குறித்தவொரு விகிதாசாரத்தில் வாழ்ந்து வருகின்றனர். இக் குடியமர்வு அமைவைச் சிங்கள அரசாங்கங்கள் மாற்றியமைக்க முனைந்தன. மேலும் குடியமர்வுத் திட்டங்களின் அமுலாக்கம் என்ற போர்வையில் அரசின் நிதி உதவியோடு சிங்கள மக்கள் இங்ஙனம் குடியமர்த்தப்பட்டனர்.

அற்ப விடயங்களுக்கும் போர் விரும்பும் யுத்த சந்நதராகும் சிங்களவர்கள் அரசாங்க உதவி கொண்டு நிறைவேற்றப்பட்ட அதற்கு குடியமர்த்தல்களையும் அத்தகைய அத்து மீறல்களையும் நியாயமானவை எனக் காண்பித்தற்கு தவளைத் தாவலில உள்ளபடியான வரலாற்றுக்கு மேலாகப் பாய்ந்து செலலும் பொருட்டு புனைகதை வரலாற்றையும் காலாவதியாகிப் போன வரலாற்றையும் கையாண்டனர். தமிழர்கள் தொன்மைக் காலங்களில் இத்தீவின் சில பிரதேசங்களில் பெரும்பான்மைக் குடிகளாக வாழ்ந்து வந்தார்கள். அப் பிரதேசங்களிலேயே அவர்களைச் சிங்களவரிலும் பார்க்க சிறுபான்மையினர் ஆக்க முனையும் அரசின் எத்தனங்களைத் தமிழ் மக்கள் வரவர மென்மேலும் உக்கிரமாக எதிர்த்து நிற்கின்றனர்.

ஆகவே இறுதிக்கட்ட இணக்கப் பேச்சுக்களின்போது காணிக்குடியமர்வு என்ற விடயம் தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு காண்பது கடினம். அதேபோல சட்டமும் ஒழுங்கும் எனும் விடயமும் கடினமானதே. ஆயினும் தீர்வு காணும் நல்வாய்ப்பு நம்பிக்கை முன்னரைவிட இப்போது அதிகமாகத் தென்படுகின்றது. 1986.7.7ஆம் திகதியாகிய இன்று இந்த சஞ்சிகை ஆசிரியர் குறிப்பு எழுதப்படுகிறது. இவ்வேளை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரும் தமிழர் விடுதலைப் போராளிகளும் அரசாங்கத்தின் பிரேரணைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு என்ன சொல்வர்களோ செய்வார்களோ என்பது நிச்சயமில்லாது இருக்கிறது. ஆயினும், பின்னர் என்பதைவிட கூடிய விரைவில் கூட்டணியினரும் போராளிகளும் இத்தகைய இணக்கப் பேச்சுகளுக்கு இசைய உரையாடல்களில ஈடுபடுவர் என நம்பப்படுகிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அனுசரிக்கக் கூடிய மனப்பான்மைகளின் சாத்தியக்கூறுகளையிட்டும் இதே நிச்சயமின்மையைக் காணலாம். அதன் தலைமை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கைகளில் உள்ளது. இன்று இலங்கை நாட்டில் இரு மனித இனங்களின் நேரெதிர் மோதல காரணமாக ஏற்பட்ட உயிர் இழப்பும் சொத்துச் சேதமும் நேர்ந்து வருகின்றன. ஆகவே இச் சேதங்கள் மேலும் தொடராதிருக்க, மற்றெல்லாவற்றையும்விட இம் மோதலுக்கு தீர்வு அவசியம். ஆயினும் அத்தலைவியோ அவரது உயர் மட்டச் சகாக்களோ அதனை அவ்வளவு அவசரமானதாகக் காணாதிருக்கின்றனர். அதனை விட அவர்களுக்குப் பொதுத் தேர்தலே அவசரமானதாகத் தெரிகிறது. அத் தலைவியின் விருப்பத்தை அனுசரித்துக் கருமங்கள் நடைபெறுமாயின் உடனடியாகவே இந்த நாட்டின் பொதுத் தேர்தல்கள் நிகழும். ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் பதவிக்காலம் போகும் போக்கில 1988/89 (என்பத்தெட்டு என்பத்தொன்பதில) இலங்கையின் பொதுத் தேர்தல்கள் நிகழ இடமுண்டு.

இனி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின நிலைமையைச் சற்று நோக்குவோம். அவர்கள, குறிப்பாகத் தமிழர் விடுதலைப் போராளிகள், தமிழ் ஈழகக்கோரிக்கையைவிடாப்பிடியாகக் 'கைப்பிடித்து' நிற்கின்றனர். 'குறைக்கவோ குறைந்தபட்சக்' கோரிக்கை இது எனக் கூறும்அவர்கள் இந்தியாவின் தீவிர நேரடித் துணையுடன் இராணுவ மார்க்கமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஓர் இலட்சியமாக அக்கோரிக்கையைக்கொண்டுள்ளனர். இக் காரணத்தை முன்னிட்டு, சமாதானமான தீர்வு எனப்படுவது அவர்களுக்கு உவப்பானதாகப் படாது.

மறுபுறத்தில்இந்திய அரசோ சமாதானமான, அதுவும்இயன்றளவு விரைவிலான, ஒரு தீர்வு தன் விரும்பத்தக்கது என்கிறது. போராளிகளையும் அவர்களுடைய அணியடுக்குகள் உபகரணங்களையும் தனதுமண்மீது கொண்டுள்ளபாரதம்அவர்கள் ஓர் 'இக்கட்டாக' உணர்கிறது. இப்பிராந்தியத்தின் பார்வையில மட்டுமல்லாது அகில உலகின் பார்வையிலும் இந்நிலைமைக்கு முகம்கொடுப்பது அந்த அரசுக்குச்சங்கடமாகிவிட்டது.

இலங்கையில் தமிழரின் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினை ஒருபுறம் இருக்க, இந்தியாவுக்கே உரியபோராளிகள்பயங்கரவாதிகளின் பிரச்சினையும் அதற்குத் தொல்லையாக உள்ளன. அங்கு இந்திய எதிர்ப்புச்

—5ம் பக்கம் பார்க்க

★ மகோற்சவகாலக் கட்டுரை

# வல்லை நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார்

வல்வெட்டித்துறை நெடிய காடு திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலய மகோற்சவம் 10ம் திகதி அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

வல்வையிலே சிவன் கோவிலும், அம்மன் கோவிலும் வலமும் இடமுமாக இயல்பாய் ஒரே இடத்தில் அமைந்திருப்பதும், ஊரின் கிழக்கு முகப்பிலே பிள்ளையார் ஆலயம் அமைந்திருப்பதும் இவ்வூர் ஆலயச் சிறப்புக்கு எடுததுக்காட்டாக அமைந்துள்ளன.

நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளமைக்கு சோழர் காலத்துச்சரித்திரங்கள்சான்று பகர்கின்றன. சோழர் காலத்தில் வல்வெட்டித்துறை துறைமுகமாக அமைந்திருந்ததாகவும், அக்கால இறங்குதுறைப் படைத் தளபதியாயிருந்த ஐங்கரதேவர் 1775ல் வல்வையின் கிழக்குப் புறத்தில் நெடியகாடு என்னுமிடத்தில் அமைந்திருந்த மடம் ஒன்றில், (தற்சமயம் ஆலயக் குருக்கள்மார் வதியும் இடத்திலிருந்தமடத்தில்) விநாயகருக்கு ஆலயம் அமைத்து பூஜிந்து வந்தார்.

அதன் பின்னர் 1790ம் ஆண்டளவில் சோழர் தளபதியின் வழித்தோன்றலாகிய நாகர் தாமர் என்பவரால் தற்சமயம் ஆலயக் களஞ்சியம் இருக்கும் இடத்தில் கணபதிக்கு முன்பிருந்ததிலும் பார்க்க பெரிய கட்டடத்தை அமைத்து பூஜித்ததோடு, மாதந்தோறும் சதுர்த்தி உற்சவத்தினையும் நடாத்தி வந்தார்.

இவர்களின் சந்ததியில் வந்த நாகர்தாமரின் மகனாகிய தாமர் கதிர்காமரால் 1840ம் ஆண்டளவில், விநாயகருக்கு நிரந்தர ஆலயம், சுற்றுப்புற வீதிகள் அமைய அமைக்க எண்ணி தற்போதுள்ள இடத்தில் ஆதிமூலம், எழுந்தருளி மண்டபம், நாகதம்பிரான், வயிரவர் போன்றோர்க்கும் கட்டடங்கள் அமைத்து நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் என நாமகரணம் சூட்டி வழிபட்டு வரலாயினர். அத்தோடுமாதந்தோறும் சதுர்த்தி உற்சவத்தையும் நடாத்திவந்த அவர், ஆவணிச்சதுர்த்தியைத் தொடர்ந்து 10 நாள் மகோற்சவத்தினையும் ஆரம்பித்து வருடா வருடம் சிறப்பாக நடாத்தி வந்தார்.

இவர்களின் சந்ததியினரே இவ்வாலயத்தினை தங்கள் சொந்த பராமரிப்பில் பன்னெடுங்காலம் நிர்வகித்து வந்தனர். 1950ம் ஆண்டளவில் ஆலயத்தைப் பராமரித்துவந்த இவர்கள் இவ்வூர்ப் பொதுமக்களையும் ஆலய நிர்வாகத்தில் பங்கு கொள்ள வகை செய்தனர்.

வல்வைப் பொது மக்களின் சமயப் பற்றையும், ஆலய பரிபாலனத்தில் கொண்டிருக்கும் ஆர்வத்தினையும், அவர்களின் செயற் திறனையும் கண்ட இவ் ஆலய ஸ்தாபகரின் வழித்தோன்றலும், அக்காலத்தில் ஆலய மணியமுமாயிருந்த காலஞ்சென்ற திரு.க. அருளம்பலம் அவர்கள் 1953ம் ஆண்டு வல்வைப் பொது மக்களையே இவ் ஆலய பரிபாலனத்தைக் கவனிக்கும்படி சகல பொறுப்புக்களையும் கையளித்தார். அதன் பின்னர் முழுக்க முழுக்க காலத்துக்குக் காலம் வல்வை பொதுமக்களால்தெரிவு செய்யப்பட்டவர்களே இவ் ஆலய பரிபாலனத்தை, பொது மக்களின்பொருளுதவி கொண்டு நிர்வாகம் செய்து வருகின்றனர்.

இவர்களுள் குறிப்பாக காலம் சென்ற திரு. நா. செல்வமாணிக்கம் அவர்கள் தொடர்ச்சியாக 30 ஆண்டுகட்கு அதிகமாக வல்வை பொதுமக்களால் கோவில் மணியகாரராகத் தெரிவு செய்யப்பட்டு, அன்னாரின் அயராத ஆலய பரிபாலன சேவை மனப்பான்மை காரணமாக இவ்வூர் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்று, அவர்களின் பொருளுதவி, அன்பளிப்போடு ஆலயத்தின் வடபகுதியில இராவணேஸ்வரன் கைலயங்கிரியை தூக்க முயற்சிப்பது போன்ற அமைப்பில், கையிலாய மலையில் வசந்தோற்சவ மண்டபம், (மண்டபத்தில் அமைக்கப் பெற்றுள்ள தூண்கள் சித்திர வேலைப்பாடமைந்த அச்சுப் பெட்டிகளைக் கொண்டு கங்கிறீற்றினால் செய்யப்பட்டவை-பிரசித்தம் வாய்ந்த இத்தூண்கள் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் உள்ள பல கோவில்களிலும் பின்னர் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது) இராசகோபுரம், பரிவார மூர்த்திகளுக்கான ஸ்தூபிக்கிருகங்களும்அமைக்கப்பெற்று, 1970ம் ஆண்டு கும்பாபிஷேகமும் செய்யப்பெற்று, நான்கு காலப் பூஜைகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆவணிச் சதுர்த்திக்கு மறுநாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெற்று வந்த முறையை மாற்றி ஆவணிப் பௌர்ணமிக்கு தீர்த்தோற்சவம் வரும் வகையில் உற்சவகாலத்தை மாற்றியமைத்து செல்வச் சந்நிதி கோவில் தீர்த்தோற்சவத்தினன்று வரும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டு, கடந்த இருபத்தைந்து வருடகாலமாக நடைமுறையிலிருந்து வருகிறது.

மூன்று ஆண்டுகளுக்கொரு முறை மக்களால் தெரிவு செய்யப்படும் பரிபாலன சபையினரே ஆலய நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்தி வருகின்றனர்.

இவ் ஆலய வாசலில் தானாகவே தோன்றிய வன்னிமரம் ஒன்று சுமார் 75 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்றது. இதுவே இவ் ஆலய விருட்ஷமாகும். இதன் கீழ் எழுந்தருளியிருக்கும் வன்னி விநாயகப் பெருமான் எந்நேரமும் பக்தர்களுக்கு காட்சியளித்து அருள் பாலிக்கின்றார்.

19-8-86 ல் நடைபெற இருக்கும் ஆலய தீர்த்தோற்சவத்தின் மறுநாள் வசந்தோற்சவ விழா நடைபெறும். நாட்டில் பிரச்சினைகள் ஆரம்பமான காலத்தின் முன்பு திருச்சிற்றம்பலப் பிள்ளையாரின் தீர்த்தோற்சவ, வசந்தோற்சவ விழாக்களைக் காண பல இடங்களிலிருந்தும் மக்கள் வல்வையில் குழுமியிருந்த காலமும் உண்டு. தற்போதைய நாட்டின் நிலை காரணமாக சகல உற்சவங்களும் ஆடம்பரமற்ற முறையிலேயே நடைபெற்று வருகின்றன.

## ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(வவுனியா)

வவுனியா ஈச்சம்குளம், காக்கையன்குளம் பகுதியில் கடந்த 30ம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடி சம்பவ இடத்திற்கு அருகில் இருந்து சில தன்னியக்க துப்பாக்கிகளையும், ரவைகளையும், ரவைக் கவசங்களையும் புலிகள் நேற்று முன்தினம் கண்டெடுத்தனர் இவைகள்சம்பவ இடத்திற்கு சில யார் தூரத்தில் பற்றைகளுக்குள் காணப்பட்டன.

★ இலங்கை இனப் பிரச்சினை பற்றிய விசேட விவாதம் லோக சபையில் ஒத்திவைக்கப்பட்டது

# 'மிகவும் நெருக்கடியான கட்டம் இது' - நாராயணன்

(புதுடில்லி)

**இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக லோக சபையில் நடைபெறுவதாக இருந்த விசேட விவாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

தற்போதைய பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால் இராணுவத்தீர்வையே நாட நேரிடும் என ஜனாதிபதி ஜெயவர்த்தன பேசியதால் எழுந்துள்ள நிலைபற்றி ஆராய விசேட விவாதம் அவசியமென அ. இ. தி. மு. க. எம். பிக்கள் வலியுறுத்தியதையடுத்து கடந்த திங்கட்கிழமை இவ்விவாதத்திற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்யா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவித்து திங்கட்கிழமை சபை எவ்வித அலுவலையும் மேற்கொள்ளாது ஒத்திவைக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை சபை கூடியபோது இவ்விவாத விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை அரசுக்கும், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இடையே தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதால் விசேட விவாதம் இப்போது நடத்துவது சிறப்பல்ல என சபையில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து இணையமைச்சர் திரு.கே.ஆர் நாராயணன் குறிப்பிடுகையில், மிக நெருக்கடியான இக்கட்டத்தில் இவ் விவாதத்தை நடத்துவது விவேகமல்ல எனச்சொன்னார்.

இதனையடுத்து இந்நிலையை அ. இ. அ. தி. மு. க எம். பி. திரு. பி. குழந்தைவேலு தானும் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார்.

தற்போது நடைபெற்று வரும் கூட்டத் தொடரின் இறுதி நாளன்று இதுபற்றி விவாதிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழகத்தில் 34ஆயிரம் ஆலயங்கள்

(சென்னை)

தமிழ் நாட்டில் 34ஆயிரம் சைவ ஆலயங்கள் இருக்கின்றன என்று அற நிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இவற்றின் பராமரிப்புக்கு அரசு நிதியுதவி செய்து வருவதாகவும் அவர் சொன்னார்.

## தி. மு. க. எம். பிக்கள் வெளிநடப்பு

# தமிழக சட்ட மேலவை கலைப்பு மசோதா லோக சபையில் நிறைவேற்றப்பட்டது

(புதுடில்லி)

தமிழக சட்ட மேலவையைக் கலைக்க வகை செய்யும் மசோதா லோக சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இம் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

சட்ட மேலவை ஆந்திராவிலும் மேற்கு வங்கத்திலும் கலைக்கப்பட்டுள்ளது என சட்ட இணையமைச்சர் அப்போது சுட்டிக்காட்டினார்.

சட்ட மேலவையைக் கலைக்கக் கோரும் தீர்மானம் சட்ட சபையால் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டுள்ளது என அ இ. அ. தி. மு. க. எம். பி. திரு. பி. குழந்தைவேலு கூறினார்.

எனினும் தி. மு. க. எம். பிக்களான டாக்டர் கலாநிதியும், சோமுவும் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

மேற்படி மசோதா சபையில் நிறைவேறியது.


## பிரயாண ஒழுங்கு

சவூதி அரேபியா செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம்

(1) TAILORS
PEST CONTROLLER
(2) SHOWL OPERATER (சவல் ஒப்பரேட்டர்)
BULL DOZER ,, (புல்டோசர்) ,,
FORKLINN ,, (f க்லின் ,,
STEEL FIXER (கம்பி கட்டுதல்)
(3) STAFF OFFICERS.
LABOURERS

ஆகிய வேலை வாய்ப்புகள் எம்மிடம் உண்டு. முதலாம், இரண்டாம் வேலை வாய்ப்பிற்கு 25 வயதிற்கு மேற்பட்டவர்களும், மூன்றாவது வேலை வாய்ப்பிற்கு 21 வயதிற்கு மேற்பட்டவர்களும், தாமதியாமல் 20ம் திகதிக்கு, முன், பாஸ்போட்டுடனும், ஆறு படங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T. இந்திரநாதன்
சற்குணவாசா,
காங்கேசன்துறை,
(நடேஸ்வராச் சந்திக்கு அருகாமையில்)
அல்லது
96, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

R/24682


## பேய் மழை

ஆந்திராவில் பெய்து வரும் பேய் மழையால் பத்துப் பேர் மடிந்தனர். ஏராளமானோர் வீடிழந்தனர்.

## பெனுஸிர் கைது

(லாகூர்)

பாகிஸ்தானில் செல்வி பெனுஸிர் பூட்டோவும், மற்றும் பல எதிர்க்கட்சித் தலைவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## படகு விபத்து

(பட்னு)

பீகாரில் நிகழ்ந்த படகு விபத்து ஒன்றில் 24 பேர் மடிந்தனர். 76 பேர் இப்படகில் பயணம் செய்தனர். 50 பேர் நீந்திக் கரை சேர்ந்தனர். இருவர் நிலை என்னவென்று தெரியவில்லை என அறிக்கைகள் கூறுகின்றன.

## ராஜினமா

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரஜைகள் குழுக்கள் ஒன்றியத்தின் இணைச் செயலாளரும் மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழுவின் தலைவருமான திரு. எஸ். சண்முகலிங்கம் சுகயீனகாரணமாக தன் பதவிகளை இராஜினமா செய்துள்ளார்.

## சிங்களக்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சீக்கியப் போராளிகள் உள்ளனர். அத்தேசத்திற்கு மிரட்டலாகச் செயற்படும் இப்போராளிகளோடு, இந்திய விரோத 'பயங்கரவாதிகள்' வேறுபல நாடுகளில் விருந்தோம்பல், புகலிடம், தஞ்சம் அளிக்கப்பட்டு வருகின்றனர். பாகிஸ்தான் பிரித்தானிய ஐக்கிய இராச்சியம், அமெரிக்க ஐக்கிய அரசுகள், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு என்பனவும், அனேக பிற நாடுகளும், இப்பட்டியலில் இடம்பெறும். இலங்கையில் எழுந்துள்ள மனித இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டுவிட்டதாயின், இப்பயங்கரவாதிகளுக்கு எதிரான தனது கோரிக்கைகளை இந்தியா நன்கு வலியுறுத்திக்கூற வழிபிறக்கும்.

இனி நாம் இலங்கைத் தமிழர் எனக் கூறிநிற்கும்இரண்டு, மூன்று இலட்சம் ஆட்கள் இந்திய மண்மிசை இன்று சென்று சேர்ந்துள்ளனர். இந்திய மாநிலமாகிய தமிழ் நாட்டின்உறுதி வாய்ந்த பொருளாதாரத்திற்குக்கூட இவர்கள் ஒரு பெரும் சுமையாகியுள்ளார்கள். தமிழ் ஈழத்திற்கோ, தனிவேறான ஓர் அரசிற்கோ தான் சார்பானதல்ல என இந்தியா திரும்பத் திரும்ப வலியுறுத்தி எடுத்து இயம்பியுள்ளது. உண்மை என்னவெனில், அத்தகைய ஒரு கோரிக்கையை தனதுஎல்லைக்கு மிகக் கிட்டவுள்ள ஒரு தேசத்தில் அது ஆதரிப்பது எப்படிச் சாத்தியமாகும்? இந்திய நாட்டின் உள்ளேயே பல்வேறு குழுமங்கள் 'சுய நிர்ணயம்' அல்லது 'தனிவேறான அரசுகள்' என கோரிக்கைக் குரல் எழுப்பி நிற்கின்றனவே!

(தொடரும்)

ஈழமுரசு

## மோட்டார் சைக்கிள் இளைஞர் பொலிஸ் சூட்டுக்குப் பலி

(முல்லைத்தீவு)

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர்மீது வீதித் தடைப் பரிசோதனையில் நின்ற பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், இளைஞர் ஒருவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். வீதி ஓரத்தில் நின்ற பொலிசாரை காணுது மோட்டார் சைக்கிள் இளைஞர்கள், முல்லைத் தீவு இராணுவ முகாமுக்கு மிக அண்மையில் வந்துகொண்டிருந்தபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது இலங்கையில் மோட்டார் சைக்கிள் பாவிப்பிற்கு தடை செய்யப்பட்ட மாவட்டம் முல்லைத்தீவு என்பது குறிப்பிடத்தக்கது.

### கோட்டையிலிருந்து திடீர் சூடு

# பண்ணைக்கு திருத்த வேலைக்குச் சென்ற

## ஆஸ்பத்திரி ஊழியர் மயிரிழையில் தப்பினர்

யாழ். அரசினர் வைத்தியசாலையின் கழிவு நீரை அகற்றுவதற்காக பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள பம்பியை இயக்குவதற்காக சென்ற ஊழியர்கள் மீது நேற்றுக்காலை கோட்டையில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தின் போது அங்கு கடமைக்குச் சென்ற யாழ். அரசினர் வைத்தியசாலையின் நீர்விநியோகப்பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் ஐவரும் மயிரிழையில் உயிர் தப்பினர்!

பண்ணையிலுள்ள மேற்படி பம்பி கடந்த சில மாதங்களாக இயங்க முடியாதிருந்ததையடுத்து அரசினர் வைத்தியசாலை கழிவுநீரை அகற்ற முடியாத நிலையேற்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகத்தினர் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டதையடுத்து வைத்தியசாலை ஊழியர்கள் பண்ணை பகுதிக்கு சென்று பம்பியை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு பம்பியை இயக்குவதற்கு சென்ற ஊழியர்கள் மீதே நேற்று கோட்டையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து கழிவுநீரை அகற்றும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தையடுத்து பண்ணை தொலைத் தொடர்பு காரியாலயத்திற்கு கடமைக்கு சென்ற ஊழியர்கள் அச்சம் காரணமாக அங்கு தொடர்ந்து கடமைபுரியாது வீடுகளுக்கு திரும்பிச்சென்றனர்.

### சட்டவிரோத மின்சாரத்தால்

## வேலணை பங்களாவடி சந்தி மின்மாற்றி வெடித்தது!

(வேலணை)

வேலணை பங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள மின்மாற்றி நேற்று புதன்கிழமை காலை ஆறு மணியளவில் பாரிய சத்தத்துடன் வெடித்தது. பின்னர் அவ்விடம் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இம் மின்மாற்றிக்கு அருகில் உள்ள மின்சார சபை விடுதியில் தங்கியுள்ள வேலணை மின் அத்தியட்சகரும், மின்பாவனையாளரும் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து மின் விநியோகத்தைதுண்டித்தனர். இதனுல் இந்தப் பாரிய மின்மாற்றி காப்பாற்றப்பட்டு விட்டது.

வேலணை மேற்கு, துறையூர், வேலணை அம்மன் கோவில் வீதி ஆகியவற்றிற்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை பன்மடங்கு அதிகரித்துள்ளதே இதற்கு காரணமாகும். மேற்படி பாதிப்பால் கட்டவுட், பிரதான மின் ஆணி போன்ற உபகரணங்கள் முற்றுக எரிந்து சேதமடைந்து விட்டது.

வேலணைப் பிராந்தியத்திற்குள் சட்டவிரோத மின்பாவனையை தடைசெய்யாவிடில் மின் மாற்றிகள் தொடர்ந்து எரியக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட இடமுண்டு.

### கடலில்...

நடலையாவிஜயநாதன்என்பவர் இது பற்றி தகவல் தெரிவிக்கையில,இந்தியாவிலிருந்து கனடா செலல ஜுலை மாதம் 7ம் திகதி பணம் கொடுத்து சீனக்கப்பலில ஏறியதாகவும் லொறி ஒன்றில் முதலில் ஏற்றிச் செலபபட்டு பின் ஆழ்கடலில் நங்கூரமிடப்பட்டிருநத கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

ஏனையோரும் ஐயாயிரம் ரூபா வரை கொடுததே பயணம் செய்ததாகவும், 35 நாள் பயணத்தின் போது இக்கப்பலில் மிகக்குறைந்த வசதிகளே இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் மொன்றியலை சமீபித்துக் கொண்டிருப்பதாககருதிக் கொண்டிருக்கையில் ஆழ்கடலில் இரு உயிர் பாதுகாப்புப் படகுகளில் இறக்கிவிடப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்கள் இப்போது கனடியப் பல்கலைக்கழக விடுதி ஒன்றில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### தமிழரின் ...

வித்தார்.

இதனைத் தவிர மேலும் மூன்று தமிழரின் சடலங்கள் பாண்டிருப்பு கடற்கரையில் ஒதுங்கியிருப்பதாகவும், அவைகள் அடையாளம் காணக்கூடிய நிலையில் இல்லை எனவும் திரு. வேல்முருகு மேலும் தெரிவித்தார்.

கல்முனையில் வர்த்தகம் செய்யும் யாழ்ப்பாணத்தவர்கள் அனைவரும் பாதுகாப்பாக அகதிகள் முகாமிலிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### எயர்லங்கா ...

பொலிஸ் பிரிவு தலைமை டைரக்டர் ராஜபக்ஷ தனது ஒய்வு பெறும் கடிதத்தை ஐ. ஜி பி.யிடம் ஒப்படைத்தார். இவரது இடத்துக்கு புதிதாக திரு. செனிவரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

### கூட்டணிக் குழு...

இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைக்காக இன்று கொழும்பு வருகின்றது. 16-ம் திகதி முதல் 18-ம் திகதி வரை ஜனதிபதியுடன் இவர்கள் பேச்சு நடத்துவர்.

### கடற்படையின் தர்பார்

## மீனையும் வலையையும் பறித்து மீனவரையும் தாக்கினர்

(சுன்னுகம்)

மீன் பிடிக்கச் சென்றவரின் வள்ளம், அவர் பிடித்த மீனுடனும் வலைகளுடனும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் நேற்றுக் காலை மயிலிட்டி கடற்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

திரு. நாகலிங்கம் தர்மலிங்கம் (வயது 24) மீன்பிடித்துக் கொண்டு திரும்பி வருகையில் எதிர்ப்பட்ட கடற்படையினர் அவரை மறித்துத் தாக்கியதுடன், உடமைகளுடன் வள்ளத்தையும் கட்டி இழுத்துச் சென்றனர்.

தாக்குதலுக்குள்ளான திரு. தர்மலிங்கம் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கொக்குவிலில் கொள்ளை ஒருவருக்கு கத்திக்குத்து

(வண்ணார்பண்ணை)

ஆயுதம்தாங்கிய இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கொக்குவில் சொர்ண வடலிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையிலுள்ள சின்னத்துரை என்பவரது வீட்டிலிருந்து ஒருலட்சம் ரூபாவுக்குமேல் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுவ்ளனர்.

நேற்று முன்தினம் இரவு எட்டுமுப்பது மணியளவில் 'சோமசெற்' கார் ஒன்றில் நவீனரகத் துப்பாக்கிகளுடன் வந்த இளைஞர்களே இக் கொள்ளையை மேற்கொண்டார்கள்.

கொள்ளையர்கள் அவர்களிடமிருந்த துப்பாக்கிமுனையிலுள்ளகத்தியால் வீட்டிலுள்ளவர்களை மிரட்டி குத்தியதால் அவ்வீட்டிலிருந்த தர்மகுலராஜா (38 வயது) என்பவர் நெஞ்சில் குத்துக் காயத்துடன் யாழ். பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### நிர்வாகம் ...

விஞல் தம்மிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு நிர்வாகம் மிக அக்கறை கொண்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதற்கு வழமையான முறையில் நிர்வாகம் இயங்குதல் வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளையில் நேற்றும் மாணவர்களின்மறியல் போராட்டம் காரணமாக நிர்வாக பிரிவுகள் தொடர்ந்து ஆருவது நாளாக இயங்கவில்லை.

### யாழ். பல்கலைக் ...

எதுவும் ஏற்படாவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி மாணவர் அமைப்புக் குழு முடிவெடுக்குமெனவும் அமைப்புக்குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இப் போராட்டம் எந்தவொரு அமைப்பிற்கும் எதிரானதல்ல எனத் தெரிவிக்கும் அமைப்புக்குழுவின் பிரதிநிதிகள் இப் பிரச்சினையில் மாணவர்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காகவே தாம் இப் போராட்டத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கின்றுர்கள்.

இப் பிரச்சினை சம்பந்தமாக பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பற்ற முறையில் இருப்பதாகவும் இவர்கள் குற்றஞ் சாட்டினுர்கள்.

இப் பிரச்சினை தொடர்பாக பருத்தித்துறை பிரஜைகள் குழு வெளியிட்ட அறிக்கை பொறுப்பற்ற முறையில் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளாமல் விடப்பட்ட அறிக்கை எனவும் இங்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

### அக்கரைப்பற்றில் ..

வீசித் தாக்கினர்.

இதனுல் கமாண்டோக்களில் பலர் காயமடைந்ததுடன், முகாமுக்கு திரும்பிச் செல்ல நேர்ந்தது.புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

### நாவற்குழி ...

கோப்பாய் - கைதடி வீதியில் ஷெல் விழுந்து வெடித்தபோது அவ்வீதியால் சென்று கொண்டிருந்த கைதடியைச் சேர்ந்த எம். வேலாயுதன் (47) என்பவர் கடுமையான காயங்களுக்குள்ளாகி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று அதிகாலை நான்கு மணிபோல் மோட்டார் சைககிளில் சென்று கொண்டிருந்தபோது இவருக்கு அருகில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததையடுத்து இவர் காயமுற்றுர்.

### பிரேத சோதனைக்கு ...

நேற்று முன்தினம் தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபிக்கு முனபாக இராணுவத்தினரால சுடப்பட்டு மரணமான மனநோயாளி குலசிங்கம் உதயகுமார் என்பவரின் சடலம் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் விசாரணைசெய்யபப்படவுள்ளதாகவும், வேறு இருவரின் சடலமும் இவ்வாறு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சடலங்கள் அழுகிப் போகும் நிலையில் காணபபடுவதாகவும் கூறப்படுகின்றது.

### டில்லி செல்வர்

நான்கு தலைவர்கள் நாளை புதுடில்லி செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## டெக்கும் கஸட்டும் பறிமுதல்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித் துறையிலுள்ள ஒரு மினி சினிமாவில் ஆபாசப் படம் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அங்கு சென்ற விடுதலைப் புலிகள், படம் காட்ட உபயோகிக்கப் பட்ட வீடியோ டெக், கசெற் முதலானவற்றை எடுத்துச் சென்றதுடன், அதன் உரிமையாளரும் எச்சரிக்கை செய்யப் பட்டார்.

## 16-ம் 17-ம் திகதிகளில் பென்ஷன்

இலங்கை வங்கி கச்சேரி கிளையில் ஒய்வூதியம் பெறுபவர்களின் ஆகஸ்ட் மாத கொடுப்பனவுகள் இம் மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

16-ம்திகதி சனி: சிவில், ஆசிரியர் ஒய்வூதியம் பெறுவோர் சகலருக்கும்.

17ம் திகதி ஞாயிறு: விதவைகள், அனுதைகள், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், அவர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கும். இக் கொடுப்பனவுகள் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் வழங்கப் படும்.

இதேவேளை செப்டம்பர் மாதம் முதல் 15ம் திகதிக்கும் அடுத்து வரும் முதல் சனிக் கிழமைகளில் குடிசார் ஒய்வூதியமும் ஆசிரியர்களின் ஒய்வூதியமும் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமைகளில் மற்றையோருக்கான ஒய்வூதியமும் வழங்கப்படும். ஞாயிற்றுக் கிழமைகளில் எந்த விதமான ஒய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னுபிரிக்க இலங்கை புது முடிவுகள்

தென்னுபிரிக்கா மீது பொருளாதார தடைகள் விதிக்கவேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை ஆதரித்துள்தால் அங்கிருந்து இலங்கை ராணுவத்துககாக பெறப்படும் ராணுவ உதவிகள் நிறுத்தப் படும் என பீ. பீ. ஸி. அறிவித்தது.

இதேபோல இலங்கையில் இருந்து பெறப்படும் தேயிலையையும் இனிமேல் தென்னுபிரிக்கா வாங்காது எனவும், விரைவில் நடைபெறவுள்ள கொழும்பு ஜொகனஸ்பேர்க் இடையிலான எயர் லங்கா விமான சேவையும் இடைநிறுத்தப்படும் என்றும் பீ. பீ. ஸி. தெரிவித்தது.

## 24 பேரும் விடுதலை

(வவுனியா)

வவுனியா ராணுவ முகாமுக்குச் செல்லும் வழியில் கடத்திச் செல்லப்பட்ட நெருங்கேணி கிராமோதய சபை உறுப்பினர்கள் 24 பேரும் பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 14-8-1986 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437